# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## முதலாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2021

FWC

**பொதுச் சாதாரணப் பரீட்சை**
**Common General Test**

**Two Hours**
**Gr -12 (2022)**

**12** **T**

**கவனிக்க :**

❖ 1 - 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, விடைத்தாளில் அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையப் புள்ளடி (✕) இடுக.

01. அவுஸ்ரேலிய நாட்டில் நடைபெற்ற "சமையயல் வல்லுநர்" கிண்ணப்போட்டியில் (Junior master chef Australia – 2020) கலந்து கொண்டு இலங்கையின் தேசிய பொருட்களிலான "Tropical mass" என பெயரிட்ட உணவுவகை தயாரிப்புக்கு 1ம் இடத்தைப்பெற்ற 11 வயது சிறுமி யார்?
1) நிசி உக்வெல 2) ஜோர்ஜியா 3) சோமலதா
4) தன்பேர்க் 5) அதிபத்செய்னா

02. 2020 ஆண்டு "தாதியரும் நீரிழிவுநோயும்" என்ற தொனிப்பொருளில் நீரிழிவு தினம் கொண்டாடப்படுகிறது. உலக நீரிழிவுத்தினம் எது?
1) March 14 2) September 14 3) October 14 4) November 14 5) December 14

03. 2021 ஆண்டு உலக "ஜிம்னாஸ்டிக்ஸ்" போட்டி நடைபெறவுள்ள நாடு எது?
1) ஜப்பான் 2) டென்மார்க் 3) ரஷ்யா 4) அமெரிக்கா 5) சீனா

04. இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள வற் (VAT Tax) வரி அறவிடப்படும் சதவீதம் எவ்வளவு?
1) 5% 2) 8% 3) 10 % 4) 12% 5) 15%

05. சுதந்திர இலங்கையின் 75வது வரவு செலவுத்திட்டம் பிரதமர் மஹிந்தராஜபக்சாவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜெக்கா, உலகவங்கி என்பனவற்றிடம் எவ்வளவு கடன் தொகையைப் பெற அரசு எதிர்பார்க்கின்றது. (அமெரிக்கடொலரில்).
1) 1000 மில்லியன் 2) 1400 மில்லியன் 3) 1600 மில்லியன்
4) 1800 மில்லியன் 5) 2000 மில்லியன்

06. 2020 ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசை பெற்றுக்கொண்ட அமைப்பு எது?
1) ஐக்கிய நாடுகள் சபை 2) உலக அனு அமைப்பு 3) யுனேஸ்கோ
4) உலக உணவுத்திட்டம் 5) உலக சுகாதார ஸ்தாபனம்

07. பிலிப்பைன்ஸ் நாட்டின் மனிலாவினை நவம்பர் முதற்பகுதியில் புயல் தாக்கியதில் சுமார் 70 மேற்பட்டோர் இறந்தனர். இப்புயலின் பெயர் என்ன?
1) நிவர் 2) வாம்கோ 3) எடாவு 4) நிசா 5) கஜா

08. முஸ்லிம் பெண்கள் பொலிஸ் சேவையில் இணைவதை ஊக்குவிப்பதற்காக "ஹிஜாப்புடனான" உத்தியோகப்பூர்வ சீருடையை அறிமுகம் செய்து உள்ள நாடு எது?
1) அவுஸ்ரேலியா 2) பாகிஸ்தான் 3) நியூசிலாந்து 4) பிரான்ஸ் 5) இங்கிலாந்து

09. அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வென்ற "ஜோபைடன்" அமெரிக்காவின் எத்தனையாவது ஜனாதிபதி ஆவர்?
1) 43 2) 44 3) 45 4) 46 5) 47

10. உலக கால்பந்தாட்ட ஜாம்பாவன்களில் ஒருவரான மரரோடானா மாரடைப்பால் இறந்தார். இவர் எந்தநாட்டைச் சேர்ந்தவர்?
1) பிறேசில் 2) சிலி 3) பெரு 4) பிரான்ஸ் 5) அஜென்ரீனா

11. 50 ஓவர் கிரிக்கற் போட்டியொன்றின் வெற்றி இலக்கு 315 ஓட்டங்களாகும். 10 ஆம் ஓவர் முடிவில் ஓட்டம் பெறும் வேகம் 5.5 ஆக இருந்தது. எஞ்சியுள்ள 40 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைவதற்குத் தேவையான குறைந்தபட்ச ஓட்டம் பெறும் வேகம் எவ்வளவு?
1) 6.4 2) 6.5 3) 6.6 4) 7.5 5) 7.6

12. மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கும் 6.6 மீற்றர் நீளமான ஒரு புகையிரதம், ஒரு சுரங்கத்தைக் கடப்பதற்கு 36 செக்கன் எடுத்து சுரங்கத்தின் நீளம் எத்தனை மீற்றர்?
1) 180 2) 190 3) 200 4) 300 5) 320

13. அருண் ஒரு தொகைப் பணத்தை, முதலிரண்டு வருடங்களில் ஆண்டுக்கு 6% உம் அடுத்த மூன்று வருடங்களில் ஆண்டுக்கு 5% உம் ஐந்து வருடங்களின் பின்னர் ஆண்டுக்கு 4% உம் என்ற எளிய வட்டி விகிதத்தின் கீழ் கடனாகப் பெற்றார். 10 வருடங்களின் பின்னர் அவர் செலுத்திய மொத்த வட்டிப்பணம் ரூ. 11 750 எனின், அவர் கடனாகப் பெற்ற பணத்தொகை எவ்வளவு?
1) ரூ. 23 500 2) ரூ. 240 000 3) ரூ. 24 500 4) ரூ. 25.000 5) ரூ. 25 500

14. பேர்ச் ஒன்றில் ரூ. 10 000 வீதம் இலாபம் ஈட்டிக்கூடியவாறு விற்பனை செய்யும் நோக்கில் திரு.நாதன் காணித்துண்டொன்றினைக் கொள்வனவு செய்தார். இக்காணிக்கு ஒரு பேர்ச்சுக்கு ரூ. 39 000 வீதம் செலுத்த விரும்பும் கொள்வனவாளர் ஒருவர் உள்ளாரெனினும், அது திரு.நாதன் ஒரு பேர்ச்சுக்குச் செலுத்திய தொகையிலும் 25% குறைவானதாகும். திரு.நாதன் ஒரு பேர்ச் காணிக்காக எதிர்பார்க்கும் பணத்தொகை யாது?
1) ரூ. 47 000 2) ரூ. 48 000 3) ரூ. 50 000 4) ரூ. 51 000 5) ரூ. 52 000

15. பவன் A நகரத்திலிருந்து B நகரத்துக்கு மோட்டார் வாகனத்தில் செல்கின்றார். அவர் பயணத்தின் முதலாவது மூன்றிலொன்றை $10\text{km h}^{-1}$ இடை வேகத்திலும், மீதித் தூரத்தை $30\text{km h}^{-1}$ இடை வேகத்திலும் வாகனத்தைச் செலுத்துகின்றார். A யிலிருந்து B வரையிலான முழுப்பயணத்துக்காக 5 மணித்தியாலம் செலவாகியது. A இற்கும் இடையிலான தூரம் எத்தனை கிலோமீற்றர்?
1) 130 2) 140 3) 144 4) 150 5) 180

16. நிமலன் ரூபாய் 300 000 ஐ முதலீடு செய்து வணிகமொன்றினை ஆரம்பித்தார். நான்கு மாதங்களின் பின்னர் காதர் ரூபாய் 450 000 பணத்துடன் வணிகத்தில் பங்காளராகச் சேர்ந்து கொண்டார். வணிகத்தைத் தொடங்கி இரண்டு வருடங்களின் பின்னர் அவர்கள் ஈட்டிய இலாபத்தை ஒவ்வொருவரும் இட்ட பணம், காலம் ஆகிய இரண்டுக்கும் விகித சமமாக பகிர்ந்து கொள்வார்களாயின் நிமலன், காதர் பெற்ற இலாபங்களுக்கிடையிலான விகிதம் யாது?
1) 3 : 4 2) 3 : 5 3) 4 : 3 4) 4: 5 5) 5 : 3

17. 10 பிள்ளைகளைக் கொண்ட ஒரு குழுவில் மிக இளையவரின் வயது 8 வருடங்களாவதோடு மிக மூத்தவரின் வயது 16 வருடங்கள் ஆகும். இப்பிள்ளைகளது வயதுகளின் கூட்டுத்தொகை 120 வருடங்கள் எனின் 12 வருடம் தொடக்கம் 16 வருடம் வரை வயதினை கொண்டிருக்கக்கூடிய குறைந்தபட்ச பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?
1) 0 2) 1 3) 2 4) 3 5) 4

18. செவ்வகமொன்றின் நீளம் 20% இனால் குறைக்கப்படுவதோடு அதன் அகலம் 20% இனால் அதிகரிக்கப்படுகின்றது. அச்செவ்வகத்தின் பரப்பளவில் ஏற்படும் மாற்றம் சதவீதத்தில் எவ்வளவாகும்?
1) 2% குறையும் 2) 2% அதிகரிக்கும் 3) 4% குறையும்
4) 4% அதிகரிக்கும் 5) பூச்சியமாகும்

19. ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று காலை 6.00 மணிக்கு திரு.பர்னாந்து, மறுநாள் திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு ஒலியெழுப்புமாறு கடிகாரத்தின் மணியை ஒழுங்குபடுத்தினார். அக்கடிகாரத்தில் ஒரு வழு உண்டு என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. அக்கடிகாரம் சீராக ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் இரண்டு நிமிடம் வீதம் கூடுதலாக நேரத்தைக் காட்டுகின்றது. திங்கட்கிழமை மணி அடிக்கும்போது சரியான நேரம் யாது?
1) முற்பகல் 11.58 2) நண்பகல் 12.00 3) பிற்பகல் 12.02
4) பிற்பகல் 12.58 5) பிற்பகல் 1.02

20. சாந்தி 2020 பெப்ரவரி 29 ஆந் திகதி சனிக்கிழமை பிறந்தார். மீண்டும் அவரது பிறந்த நாள் பெப்ரவரி 29 சனிக்கிழமையாக அமையக்கூடிய மிகக்கூடிய ஆண்டு எது?

1) 2040 2) 2044 3) 2048 3) 2052 5) 2056

21. சித்திப் புள்ளி 20 ஆகவுள்ள சோதனையொன்றுக்கு ஐந்து மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்கள் அனைவரும் சோதனையில் சித்தியடைந்ததோடு, அவர்கள் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை 105 ஆகும். சோதனையில் உச்சப் புள்ளிகளைப் பெற்ற இரண்டு மாணவர்கள் இருப்பார்கள் எனின், அவ் உச்சப்புள்ளி எதுவாக இருக்க முடியும்?

1) 22 2) 23 3) 24 4) 25 5) 26

22. ஒரு தொழிற்சாலைக்கு ஒரு குறித்த உருப்படியை உற்பத்தி செய்வதற்காக அவசர கோரிக்கையொன்று கிடைத்திருக்கின்றது. அங்கு அந்த உருப்படியை உற்பத்தி செய்யக்கூடிய A, B, C எனும் மூன்று பொறிகள் உள்ளன. ஹெறி A யினால் மொத்தக் கோரிக்கையையும் 3 மணித்தியாலங்களில் பூர்த்தி செய்ய முடியும். B யினாலும் C யினாலும் முறையே 4, 6 மணித்தியாலங்களில் அதனைப் பூர்த்தி செய்யலாம். தொழிற்சாலை முகாமையாளர் இந்தக் கோரிக்கையைப் பூர்த்தி செய்வதற்காக மூன்று பொறிகளையும் பயன்படுத்துவது எனத் தீர்மானித்து ஏககாலத்தில் மூன்று பொறிகளையும் இயக்குவித்தார். சரியாக ஒரு மணித்தியாலத்தின் பின்னர் பொறி B இல் கோளாறு ஏற்பட்டு இயக்கம் தடைப்பட்டது. அவ்வேலையினைச் செய்து முடிப்பதற்காக மற்றைய இரண்டு பொறிகளுக்கும் மேலும் எவ்வளவு எடுக்கும்?


1) 30 நிமிடத்தை விட சற்றுக் குறைய
2) சரியாக 30 நிமிடம்
3) 30 நிமிடத்தைவிட சற்றுக் கூடுதலாக
4) ஒரு மணித்தியாலத்தைவிட சற்றுக் குறைய
5) ஒரு மணித்தியாலத்தை விட சற்றுக் கூடுதலாக

23. இக்கோலத்தின் இறுதிக் கட்டத்தில் வரவேண்டிய எண் யாது?

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 8 | 19 | 42 | 89 | 184 | ? |

1) 268 2) 368 3) 374 4) 375 5) 376

24. உருவில் காட்டியுள்ள விரிவைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய சதுரமுகியில் ஒன்றுக்கொன்று எதிரான முகப்புகளில் காணக்கூடிய குறியீட்டுச் சோடி பின்வருவனவற்றுள் எது?



1) ✶ உம் ○ உம் 2) ✶ உம் □ உம் 3) △ உம் + உம்
4) ◇ உம் □ உம் 5) △ உம் □ உம்

❖ **25 தொடக்கம் 27 வரையான வினாக்கள் P, Q, R, S, T, U என்ற ஆறு உறுப்பினர்களைக் கொண்ட சில குடும்பங்கள்பற்றியவை.**

- இதில் சட்டத்தரணி, பொறியியலாளர், படவரைஞர், வைத்தியர், ஆசிரியர், மற்றும் ஒருவர் வேலை அற்றவர் என்ற வகையில் உள்ளனர்.
- T என்பவர் படவரைஞர் அல்ல.
- இதில் இரு பெண்கள் உள்ளனர்.
- R என்பவர் வீட்டுபணிப்பெண், இவர் T இனை திருமணம் முடித்துள்ளார்.
- வைத்தியர் திருமணம் முடித்திருப்பது P இனை இவர் ஒரு ஆசிரியர் ஆவார்.
- Q என்பவர் சட்டத்தரணி அத்துடன் U திருமணமாகாதவர்.

இத்தரவுகளைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

25. இதில் வைத்தியர் யார்?

1) U 2) T 3) P 4) S 5) Q

26. வீட்டுப்பணிப்பெண்ணின் கணவனின் தொழில் எது?

1) வைத்தியர் 2) பொறியியலாளர் 3) ஆசிரியர்
4) படவரைஞர் 5) சட்டத்தரணி

27. திருமணமான சோடியைக் குறிக்கும் விடை எது?
1) Q யும் T யும்
2) Pயும் Tயும்
3) P யும் S உம்
4) Q வும் P யும்
5) P யும் U வும்

❖ **28, 29 வரையான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டன.**
A + B என்பதால் கருதப்படுவது A, B யுடைய மகன் என்பதாகும்.
A – B என்பதால் கருதப்படுவது A, B யுடைய மனைவி என்பதாகும்.
A X B என்பதால் கருதப்படுவது A, B யுடைய சகோதரன் என்பதாகும்.
A ÷ B என்பதால் கருதப்படுவது A, B யுடைய தாய் என்பதாகும்.
A = B என்பதால் கருதப்படுவது A, B யுடைய சகோதரி என்பதாகும்.


28. X = Y ÷Z என்பதால் கருதப்படுவது?
1) X, Z உடைய மாமி
2) X, Z உடைய சகோதரி
3) Z, X உடைய மருமகன்
4) Z, X உடைய மகள்
5) மேற்கூறிய ஒன்றமல்ல

29. X = Y +Z என்பதால் கருதப்படுவது என்ன?
1) X, Z உடைய மாமி
2) X, Z உடைய சகோதரி
3) Z, X உடைய மருமகள்
4) Z, X உடைய மகள்
5) மேற்கூறிய ஒன்றமல்ல

30. ஒரு ஓவியத்தைப் பார்த்து ஒரு மனிதன் இவ்வாறு கூறினான்.
“இந்த மனிதனின் தந்தை என்னுடைய தந்தையின் மகன். அத்துடன் எனக்கு எந்த சகோதரனோ சகோதரியோ இல்லை” அவன் யாருடைய ஓவியத்தைப் பார்த்து கொண்டிருந்தான்?
1) அவனுடைய மருமகன்
2) அவனுடைய தந்தை
3) தன்னுடைய ஓவியம்
4) அவனுடைய மகன்
5) அவனுடைய மாமா


❖ **31 தொடக்கம் 33 வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் குறித்த மூன்று தொடைகள் தரப்பட்டுள்ளன. அந்த மூன்று தொடைகளுக்கிடையேயும் காணப்படும் தொடர்பை மிகவும் நல்ல முறையில் வகைக் குறிக்கும் வென்வரிப்படத்தைத் தெரிவு செய்க.**

31. கல்விமாணிப்பட்ட ஆசிரியர்கள், தமிழ் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், திருமணமாகாத ஆசிரியர்கள்.




(1) (2) (3) (4) (5)

32. சிறுகதைப் புத்தகங்கள், ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ள இலக்கிய புத்தகங்கள், தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ள சிறுகதைப் புத்தகங்கள்.



(1) (2) (3) (4) (5)

33. தமிழ் மொழி மூலப் பாடசாலைகள், தேசிய பாடசாலைகள், அரச பாடசாலைகள்.



(1) (2) (3) (4) (5)

❖ ***34 தொடக்கம் 36 வரையான வினாக்கள் தொங்கு பாலத்தைக் கடந்து செல்லும் அனுலன், மகிழன், ஜனகன் தாசன் என்ற நான்கு நண்பர்கள் தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.***

- ♣ இரவு நேரப் பயணத்திற்கான புறப்பட்ட இந்த நான்கு பேருக்கும் காடு ஒன்றிலுள்ள தொங்கு பாலத்தைக் கடக்க நேரிட்டது. பாலத்தினூடாக ஒரு தடவைக்கு இருவர் மட்டுமே செல்ல முடியும். மேலும் அவர்களுக்கு ஒரு மின் சூளை மட்டுமே பயன்படுத்த முடியும். எந்தவொருவரும் இருட்டிலே பயணஞ் செய்ய முடியாது.
- ♣ ஒவ்வொருவருக்கும் கடப்பதற்கு எடுக்கும் மிகக் குறைந்த நேரம் மாறுபடும் அனுலனுக்கு 2 நிமிடங்களிலும் மகிழனுக்கு 3 நிமிடங்களிலும் பாலத்தைக் கடந்து செல்ல முடியும். எனினும் தாசனுக்கும் ஜனகனுக்கும் அதற்காக 10 நிமிடங்கள் வீதம் தேவைப்படும்.
- ♣ அவர்கள் மிகக் குறைந்த நேரத்திலே சென்றடைய வேண்டும். அந்த நால்வருக்கும் பாலத்தைக் கடப்பதற்காக 21 நிமிடங்கள் செலவாகும்.

இந்த தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைக் கண்டு அந்த விடையை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது இலக்கத்தில் மட்டும் எழுதுக.

34. முதலில் இருவர் பாலத்தைக் கடந்து சென்றடைந்தனர். அதற்காக அவர்கள் செலவழித்த நேரம் எத்தனை நிமிடங்களாகும்?

1) 3 2) 5 3) 6 4) 10 5) 12

35. முதலில் கடந்து சென்றவர்களுள் ஒருவர் மீண்டும் வருகை தந்ததோடு இன்னொருவருடன் மறுபக்கம் சென்றார். அதற்காக அவர்கள் செலவு செய்த மொத்த நேரம் எத்தனை நிமிடங்களாகும்?

1) 3 2) 5 3) 10 4) 12 5) 18

36. இறுதியிலே ஒருவர் மீண்டும் வந்து எஞ்சியிருந்த நண்பனுடன் கடந்து சென்றார். அதற்காக செலவு செய்த குறைந்த நேரம் எத்தனை நிமிடங்களாகும்?

1) 3 2) 5 3) 6 4) 10 5) 12

❖ **37 தொடக்கம் 39 வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் குறித்தவொரு கூற்றும் அந்தக் கூற்றை அடிப்படையாகக் கொண்டு பெறக்கூடியதென எதிர்பார்க்கப்படும் A, B என்றவாறான இரு முடிவுகளும் தரப்பட்டுள்ளன.**

**தரப்பட்ட கூற்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அந்த இரு முடிவுகளுள்**

- ♣ A என்ற கூற்றுக்கு மட்டும் நிச்சயமாக வரமுடியுமெனின் இலக்கம் 1 ஐயும்
- ♣ B என்ற கூற்றுக்கு மட்டும் நிச்சயமாக வரமுடியுமெனின் இலக்கம் 2 ஐயும்
- ♣ A, B என்ற இரு கூற்றுக்களுக்கும் நிச்சயமாக வரமுடியுமெனின் இலக்கம் 3 ஐயும்
- ♣ A அல்லது B என்ற எந்தவொரு கூற்றிற்கும் நிச்சயமாக வரமுடியாது எனின் இலக்கம் 4 ஐயும்.
- ♣ A அல்லது B என்ற எந்தவொரு கூற்றையும் நிச்சயமாக கூறமுடியாவிடின் இலக்கம் 5 ஐயும் தெரிவு செய்க.

37. கூற்று : பல்கலைக்கழகங்களில் நடைபெறும் பகிடிவதைகளை முற்றாக இல்லாது செய்ய வேண்டுமெனின் பல்கலைக்கழகங்களில் மாணவர் சங்கங்களும் அதற்காக முன்னுரிமையைக் கொடுத்து செயற்பட வேண்டும்.

முடிவு : A. பல்கலைக்கழகங்களில் மாணவர் சங்கங்கள் முன்னுரிமை கொடுக்காது விடின் பகிடிவதையை குறைக்க முடியாதுபோகும்.

B. மாணவர் சங்கங்கள முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்காதுவிடின் பல்கலைக்கழகங்களில் பகிடிவதையைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கக்கூடிய வேறு வழிமுறைகள் உள்ளன.

1) 1 2) 2 3) 3 4) 4 5) 5

38. கூற்று : கல்விக்காக எவ்வளவு பணம் அரசினால் செலவழிக்கப்பட்டாலும் க.பொ.த(சா.தர) பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை இன்னமும் உயர்ந்த மட்டத்திலேயே உள்ளது,

முடிவு : A. கல்விக்காக எவ்வளவு பணம் அரசினால் செலவழிக்கப்பட்டாலும் க.பொ.த(சா.தர) பரீட்சையிலே கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கைக்கிடையே எவ்விதமான தொடர்பொன்றும் இல்லை.

B. க.பொ.த(சா.தர) பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கையானது அந்த பாடத்தில் சித்தியடைந்த சதவீதத்தை விட மிகவும் அதிகமாகும்.

1) 1 2) 2 3) 3 4) 4 5) 5

39. கூற்று : இரசாயன பதார்த்தங்களைப் பயன்படுத்தாது உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் உணவு வகைகளின் பயன்பாட்டினை பொதுமக்களிடையே பிரபல்யப்படுத்துவதன் மூலம் அவர்களினது சுகாதார நிலைமைகளை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு செல்லமுடியும்.

முடிவு : A. பொதுமக்களினது சுகாதார நிலைமை கீழ்மட்டத்தில் காணப்படுவதற்கு ஒரு காரணமாக அமைவது இரசாயனப் பொருட்களினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களை நுகர்வதாகும்.

B. இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தாது இருப்பினும் உற்பத்தி செய்யக்கூடிய உள்ளூர் உணவு வகைகள் உள்ளன.

1) 1 2) 2 3) 3 4) 4 5) 5

❖ **40 தொடக்கம் 42 வரையிலான வினாக்கள் சிவா, குணா, அகிலன், அப்போன்ஸ் என்ற நான்கு ஆண்களும் ஒழுங்குமுறையின்றி அவர்கள் திருமணம் முடித்துள்ள சாந்தி, அமிலா, சங்கவி, சுந்தரி என்ற நான்கு பெண்களினதும் வயது தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.**

- இந்த நான்கு பெண்களிடையே உள்ள வயதில் கூடிய நபரானவர் சாந்தியாவதுடன் அவர் அல்போன்ஸ்ஸை விட வயதில் கூடியவராவார்.
- சிவா மற்றும் குணாவை விட அகிலன் மற்றும் அல்போன்ஸ் ஆகியோர் வயதில் கூடியவர்களாகும்.
- சிவாவை விட குணா வயதில் கூடிவராவதுடன் அவர்கள் இருவரினதும் மனைவிமார்கள் அவர்கள் இருவரை விடவும் வயதில் குறைந்தவர்கள் ஆவார்கள்.
- அல்போன்ஸ் திருமணம் செய்து இருப்பது இங்குள்ள வயதில் மிகக் குறைந்த பெண்ணையாகும்.
- அமிலா மற்றும் சங்கவி ஆகிய இருவரினதும் வயதுகள் ஒன்றிற்கொன்று சமனாகும்.
- இந்த திருமணமான சோடியினருள் அதிகூடிய வயது வித்தியாசம் காணப்படுவது சங்கவி மற்றும் அவரது கணவருக்கிடையிலாகும்.

இந்தத் தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்க.


40. சிவாவினது மனைவியின் பெயர் என்ன?
1) சாந்தி 2) அமிலா 3) சங்கவி 4) சுந்தரி 5) கூறமுடியாது

41. சங்கவியினது கணவனின் பெயர் என்ன?
1) சிவா 2) அகிலன் 3) குணா 4) அல்போன்ஸ் 5) கூறமுடியாது

42. அகிலனது மனைவியின் பெயர் என்ன?
1) சாந்தி 2) அமிலா 3) சங்கவி 4) சுந்தரி 5) கூறமுடியாது

❖ ***43 தொடக்கம் 45 வரையான வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவு செய்க.***

43. கீழேயுள்ள உருவிலே ஒன்றிற்கொன்று வேறுபட்ட எத்தனை நாற்பக்கல்கள் உள்ளன.




1) 13
2) 14
3) 17
3) 15
5) 16

44. 30 மாணவர்கள் உள்ள வகுப்பொன்றிலே பெண் பிள்ளைகள் குறித்தவொரு பாடத்திற்கு பெற்றுக் கொண்ட புள்ளிகளின் இடைப்புள்ளி 50 ஆகும். ஆண் பிள்ளைகள் அந்தப்பாடத்திற்கு பெற்றுக் கொண்ட புள்ளிகளின் இடைப்புள்ளி 53 ஆகும். வகுப்பிலுள்ள மொத்த மாணவர்களும் அந்தப் பாடத்திற்குப் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் இடைப்புள்ளி 51 ஆகும். அவ்வாறெனின் அந்த வகுப்பில் எத்தனை பெண் பிள்ளைகள் உள்ளனர்.

1) 10 2) 15 3) 20 4) 25 5) 27

45. ஒரே அளவுகளைக் கொண்ட 27 சதுரமுகிகள் கீழேயுள்ள உருவில் காட்டியவாறு வைக்கப்பட்டுள்ளன. இங்கு மூன்று பக்கங்களுக்கு அதிகமான பக்கங்கள் வேறு சதுரமுகிகளுடன் தொடர்புபடுமாறு எத்தனை சதுரமுகிகள் உள்ளன.



1) 15
2) 17
3) 19
4) 21
5) 23

❖ ***46, 47, 48 ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாய்க் கொண்டவை.***
***வீட்டில் ஒரு பெண்ணிற்கும் ஒரு தபாற்காரருக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் பகுதிகள் பின்வருமாறு.***
***ஆனால் அப்பகுதிகள் சரியான ஒழுங்கில் அமையவில்லை.***

A – வணக்கம் தபாற்காரரே! அது சாதாரண கடிதமா, பதிவுக் கடிதமா?

B – வணக்கம் அம்மா!

C – பிரச்சினை இல்லை, அம்மா.

D – இப்போது நான் தயார். தயவு செய்து கடிதத்தை எனக்குத் தாருங்கள்.

E – அம்மா, நீங்கள் கடிதத்தைப் பெற்றுள்ளீர்களா என்பதைக் காட்டுவதற்குத் தயவுசெய்து இத்துண்டில் உங்கள் கையொப்பத்தை இடுங்கள்.

F – இங்கு நான் எனது கையொப்பத்தை இடுகின்றேன்.

G – அம்மா அது ஒரு பதிவுக் கடிதம்.

H – நான் எனது கைகளைக் கழுவ வேண்டும். தயவு செய்து சிறிது நேரத்திற்குக் காத்திருக்க முடியுமா?

I – இதோ உங்களுக்கு நான் தருகின்றேன்.

J – நன்றி

K – நன்றி அம்மா வணக்கம்

L – உங்களுக்கும் வணக்கம்

46. கலந்துரையாடலின் மிகத் தருக்க ரீதியான தொடரை வகைக்குறிக்கும் விடையைத் தெரிந்தெடுக்க.

1) ABHGDCIJEFLK 2) ABHGDCIJFEKL 3) BAHGDCIJEFKL
4) BAGHCDIJEFKL 5) BAGHCDIJFELK

47. தபாற்காரர் கொண்டுவந்த கடிதம் பதிவுக் கடிதம் என்பதை நிறுவும் இரு பகுதிகளையும் கொண்டது யாது?

1) A, B ஆகியன
2) A, H ஆகியன
3) E, I ஆகியன
4) G, H ஆகியன
5) E, G ஆகியன

48. தபாற்காரர் கொண்டுவந்த கடிதம் சாதாரண கடிதமெனின், மேற்குறித்த கலந்துரையாடலின் பொருத்தமற்ற இரண்டு பகுதிகள்.

1) B, H ஆகியன
2) H, K ஆகியன
3) E, F ஆகியன
4) E, L ஆகியன
5) F, L ஆகியன

❖ ***49, 50 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து குறுகிய பந்திகள் ஒவ்வொன்றும் மூன்று கூற்றுக்களுடன் தரப்பட்டுள்ளன. பந்திகளில் ஒன்றில் மாத்திரம் மூன்று கூற்றுக்கள் ஒரு தருக்க ரீதியான தொடர்பைத் தருமாறு ஒழுங்குபடுத்தப்படலாம். ஒரு தருக்க ரீதியான தொடர்பைக் காட்டுவதற்கு மீளவொழுங்குபடுத்தப்படத்தக்க கூற்றுக்களைக் கொண்டுள்ள பந்தியைத் தெரிந்தெடுக்க.***

49. 1) அஜித் பேரேரா தேசிய மட்டத்திலான கிறிக்கெற்றுப் பயிற்சியாளராவார். திரு. பெரேராவின் மகன் கூடைப்பந்தாட்டத்திற்கான பாடசாலைத் தலைவரும் மகள் வலைப்பந்தாட்டத்திற்கான தலைவியுமாவார். தந்தையின் ஆற்றல் பிள்ளைகளிடமும் காணப்படுகின்றது.

2) சீமெந்து இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அதேவேளை இறக்குமதி செய்யவும் படுகின்றது. சுண்ணாம்புக்கல் சீமெந்தை உற்பத்தி செய்வதற்கான பிரதான மூலப்பொருளாகும். இலங்கையில் சுண்ணாம்புக்கல் இயற்கையில் கிடைக்கின்றது.

3) இலங்கையில் தென்னை ஓர் உணவுப் பயிராகும். வீட்டுத்தோட்டங்களிலும் பெருந்தோட்டங்களிலும் தென்னை பயிரிடப்படுகின்றது. பெரும்பாலான தென்னந் தோட்டங்கள் புத்தளம், குருநாகல், கம்பஹா மாவட்டங்களில் உள்ளன.

4) கடதாசி உற்பத்தியில் தாவர மூலப்பொருள்களிலிருந்து தயாரிக்கப்படும் நீர்க் கூழ் முதலில் ஒட்டும் பதார்த்தங்களை அகற்றுவதற்காகப் பரிகரிக்கப்படுகிறது. நீரை அகற்றிய பின்னர் தடிப்பான கூழ் உலர்த்தப்படுகின்றது. கூழ் வெளிற்றப்பட்டு, நிரப்பிகள் சேர்க்கப்பட்டு நீரை அகற்றுவதற்காக உருளிகளினால் நெருக்கப்படுகின்றது.

5) இலங்கையில் ஆட்கள் மரணமடையும் மோட்டார் விபத்துக்கள் தினமும் 4 வீதம் நடைபெறுகின்றன. கதி கொல்கின்றது. மரணம் சம்பவிக்கும் மோட்டார் விபத்துகளுக்கு வாகனத்தைச் செலுத்தும்போது துயிலல் முக்கிய காரணமாகும்.

50. 1) இப்போது அரசாங்கப் பாடசாலைகளில் தரம் 3 இலிருந்து ஆங்கில மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது. தரம் 1 இற்கும் தரம் 2 இற்கும் தகுந்த பாடநூல்களை எழுதும் பணியும் ஆசிரியர் பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் தரம் 1 இற்கும் தரம் 2 இற்கும் செயற்பாட்டை அடிப்படையாய்க் கொண்ட வாய்மொழி ஆங்கிலத்தை ஒரு பாடமாக மேம்படுத்துவதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2) அரசாங்கம் மாட்டு வளர்ப்பை ஊக்குவிக்கின்றது. ஒரு பசு நாள் ஒன்றுக்கு 20 லீற்றர் பாலைத் தருகின்றது. பால் ஒரு நிறையுணவாகும்.

3) செல்லிடத் தொலைபேசி ஓர் அழைப்பு உத்தி மாத்திரமல்ல, வலையமைப்புத் தொகுதியின் ஒரு கூறும் ஆகும். கடிகாரம் ஒரு நேரம் பேண்கருவி மாத்திரமல்ல. ஓர் அணிகலமும் ஆகும். தங்க நகை ஒரு கவர்ச்சியான அணிகலம் மாத்திரமல்ல, ஒரு முதலீடும் ஆகும்.

4) பெரும்பாலான மலர்கள் காலையில் பூக்கின்றன. வெண்ணிற மலர்கள் இரவிலும் காலையிலும் பூக்கின்றன. இரவில் பூக்கும் மலர்கள் நறுமணமுள்ளன.

5) அடுத்த 48 மணித்தியாலங்களில் மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் முன்னறிவிப்புச் செய்கின்றது. கடும் மழையுடன் கடுங்காற்று, மின்னல், இடிமுழக்கம் ஆகியன இருக்கும் ஆகையால் மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிக்குச் செல்ல வேண்டாமென அறிவுறுத்தப்படுகின்றனர். உள்நாட்டில் மீன்பிடிக்கும் மீனவர்களும் இறால் பண்ணைகளில் உள்ள தொழிலாளர்களும் வானிலை முன்னறிவிப்பு எச்சரிக்கைகள் பற்றி அக்கறை கொள்வதில்லை.